**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S No. 28 of 2024

Deposition of P.W. 1

Name of the Witness: திரு.மனோகரன்

Date : 04.03.2026

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

10) வா.சா.ஆ.2 4ம் பிரதிவாதி வாடகை கேட்டு சட்ட அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். இந்த வழக்கு போடுவதற்கு முன்பாக வா.சா.ஆ.2 அனுப்பப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கு போட்ட பின்பு தான் அனுப்பப்பட்டது. வா.சா.ஆ.2 அறிவிப்பிற்கு நான் வா.சா.ஆ.3 பதில் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். அந்த பதில் அறிவிப்பில் 1986ல் என் அப்பாவிற்கு பாகபிரிவினை மூலமாக பாத்தியம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 1974ல் ஏற்பட்ட வாய்மொழி பாகபிரிவினை ஊர்ஜிதம் செய்வதற்காக தான் 1986ல் பாகபிரிவினை குர்சீட்டாக எழுதப்பட்டது என்றால் சரிதான்.

11) தாவா சொத்துக்கள் யார் பெயரில் உள்ளதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் அப்பாவிற்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்துக்களை அவரது பேரனுக்கு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுத்து விட்டதால் தாவா சொத்தில் எனக்கு எந்த பாகமும் இல்லை என்றால் சரியல்ல. வடிவேலு அவரது சொத்துக்கள் மீது எந்த விதமான ஆவணமும் எழுதி வைக்காமல் விட்டு சென்றுள்ள பருவதனஅள்ளி கிராம சர்வே எண் 687/2பி3வி சொத்துக்களை சேர்க்காததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

12) இந்த வழக்கின் 4ம் பிரதிவாதி பென்னாகரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் போட்ட ஆர்சிஓபி வழக்கில் நான் ஆஜரானேன் என்றால் சரிதான். என் அப்பாவுடன் பிறந்த சகோதரர்களான சின்னு (எ) முனுசாமி செட்டி கூட்டாக அனுபவித்து வந்ததில் சர்வே எண் 657/1ல் 0.45சென்ட் சின்னு(எ) முனுசாமி பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது, சின்னு(எ) முனுசாமி பாகத்தை கௌரன் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது, தாவா புல எண் 657/2 சொத்து வீரண்ணசெட்டி மற்றும் சின்னு (எ) முனுசாமி பெயரில் 25.5.1956ல் கூட்டாக கிரையம் பெற்ற சொத்தில் என் அப்பா பாகத்திற்கு பு.எக்டர் 0.21.00 மற்றும் 658/2பி புஞ்சை எக்டர் 0.33.5, 678/2 புஞ்சை எக்டர் 0.59.5 ஆக மொத்தம் எக்டர் 1.14.00 நிலங்கள் முழுவதும் மற்றும் 3 அடி அகல வழிபாத்தியம் உட்பட என் அப்பா பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

13) என் அப்பாவிற்கு குர்சீட்டில் பாகமாக வந்த சொத்தில் அரசாங்கம் ஆர்ஜிதம் செய்து கொண்டது என்றால் சரிதான். அது சம்பந்தமாக எல்ஏஓபி 15/1994 என்ற வழக்கு தருமபுரி சார்பு நீதிமன்றத்தில் நடந்தது என்றாலும், 7.4.1999ல் இழப்பீடு கொடுக்க வேண்டும் என்று உத்திரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். இழப்பீடு தொகை அதிகம் என்று ஏ.எஸ்.652/2002 சென்னை உயர் நீதிமன்றத்தில் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். என் அப்பா அதில் Cross objection தாக்கல் செய்து எதுவும் 12.11.2009ல் அனுமதிக்கப்பட்டது என்றால் சரிதான். சென்னை உயர் நீதிமன்றத்தில் 2ம் பிரதிவாதி சுகுமாரன் தான் சென்னைக்கு போய் வந்து பார்த்து கொண்டார் என்றால் சரியல்ல, எனது அப்பா தான்

பார்த்து கொண்டார். 2ம் பிரதிவாதி பஞ்சாயத்து ஒப்பந்தததாரராக தொழில் செய்து வந்தார் என்றால் எனக்கு தெரியாது. அவரின் தனிப்பட்ட வருமானத்தை வைத்து தான் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு நடத்தினார் என்றால் சரியல்ல, என் அப்பா தான் நடத்தினார். என் அப்பாவிற்கு பென்சனை தவிர வேறு வருமானம் இல்லை என்றாலும், 2ம் பிரதிவாதி தான் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கை நடத்தினார் என்றால் சரியல்ல. என் அப்பா தான் நடத்தினார்.

14) நான் குடிப்பழக்கதிற்கு அடிமையாகி கடன் அதிகமாக பெற்றிருந்தார் என்றும் அதை என் அப்பாவும், 2ம் பிரதிவாதியும் தான் அடைத்தார்கள் என்றால் சரியல்ல. என் அப்பாவிடம் சொத்துக்களை கேட்டு தகராறு செய்து வந்தேன் என்றால் சரியல்ல. நான் தொல்லை செய்து வந்ததால் தான் 3000அடி காலி ஜாகா 4 மனைகளை விற்று என் அப்பா கடன்களை அடைத்தார் என்றால் சரியல்ல. நான் தொழில் செய்வதாக சொல்லி அந்த பணத்தை பெற்று தொழில் எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல.

15) என் அம்மா அவரை துன்புறுத்துவதாக போலிசில் புகார் கொடுத்தார் என்றால் கொடுத்தார், ஆனால் அது பொய்யானது. என் அம்மா கொடுத்த புகாரின் பேரில் நடவடிக்கை எடுக்காததால் என் அம்மா உயர் அதிகாரிகளுக்கு புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல, அது பொய்யான புகார் என்பதால் தான் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. என்னுடைய பங்கிற்காக என் அப்பா எனக்கு 3000சதுரடி காலி ஜாகாவை விற்று பணத்தை கொடுத்து விட்டதாலும், 2ம் பிரதிவாதி சென்னை உயர்நீதிமன்றத்தில் நடந்த வழக்கின் செலவிற்காக அவர் நடத்தி வந்த கண்ணன் டிரேடர்ஸ் மூலமாக வந்த வருமானத்தை வைத்து

வழக்கிற்கு செலவு செய்ததால் என் அப்பா 2ம் பிரதிவாதியின் மகனான 4ம் பிரதிவாதிக்கு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்தார் என்றால் சரியல்ல. எனக்கு கடை வாடகைக்கு விடப்பட்டது என்றாலும், நான் கொரானா காலத்தை காட்டி வாடகை கொடுக்காமல் இருந்து விட்டு தற்போது சொந்தம் கொண்டாடி வருகிறேன் என்றால் சரியல்ல.

*16)* நான் இந்த வழக்கில் சேர்க்காத பொது சொத்தின் சர்வே ண் 657/ 2பி3சி புஞ்சை எக்டர் 0.0.50 சொத்தில் ஜீங்சீட் போட்ட இரண்டு கடை கட்டி இரண்டு கடைக்கும் சேர்த்து மாதம் ரூபாய் *14* ஆயிரத்திற்கு வாடகைக்கு விட்டுள்ளேன் என்றால் சரியல்ல. என் மகள் அந்த சொத்தை விலைக்கு வாங்கி வாடகைக்கு விட்டு வட்டி கட்டி வருகிறார். என் மகள் அவரது தாத்தாவின் சொத்தை வாங்கி கொண்டார். எந்த ஆவணத்தின் அடிப்படையில் அந்த சொத்தை என் மகள் வாங்கினார் என்றால் என் அப்பா 3ம் தரப்பினருக்கு சொத்தை விற்று விட்டார், அதை பஞ்சாயத்தில் பேசி என் மகள் விற்பனை செய்த நபருக்கு ரூபாய் 5 லட்சம் கொடுத்து வாங்கி கொண்டார். என் மகள் சொத்தை வாங்கிய விவரத்தை என் தாவாவிலும், நிருபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை. தற்போது தான் தெரியவந்தது. என் மகள் சொத்தை வாங்கியதற்கு ஆவணம் உள்ளது. அடுத்த முறை வரும் போது அதை தாக்கல் செய்கிறேன்.

*17)* சர்வே ண் 657/2பி3சி சொத்தை என் அப்பா யாருக்கும் விற்கவில்லை என்றாலும், என் மகளும் அதை வாங்கவில்லை என்றாலும், அவ்வாறு என் மகள் வாங்கியதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் அப்பா அந்த சொத்தை விற்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியும்.

தற்போது இருந்து 30 வருடத்திற்கு முன்பாக அந்த சொத்தை விற்றார். அந்த சொத்தை வாங்கிய நபரின் பெயர் மாதப்பன். மாதப்பன் வாங்கிய சொத்தில் நடுவில் கடையை கட்டி விட்டு, மீதியை 3ம் நபருக்கு விற்று விட்டார். இந்த வழக்கு போடுவதற்கு 4, 5 மாதங்களுக்கு முன்பாக மாதப்பன் விற்று விட்டார்.

18) என்னுடைய மகள் மாதப்பன் விற்ற நபர்களிடமிருந்து ரூபாய் 5 லட்சம் பணம் செலுத்தி வாங்கி கொண்டார். அப்போது என் மகள் என் சித்தப்பாவிற்கும் எனக்கும் பாகம் ஏற்பட்டால் பணத்தை அவருக்கு கொடுத்து நானும், என் தம்பியும் பாகம் எடுத்து கொள்ளலாம் என்று சொன்னார். இந்த விவரங்களை நான் தாவாவிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என் அப்பா பேரில் இருந்த சொத்துக்களை என் மகள் வாங்கி கொண்டதாலும், அதில் எனக்கும் உடன் பிறந்தவர்களுக்கும் பாகம் வரும் என்று சொல்லவில்லை. நான் சொல்வது தவறு என்றாலும், என் மகள் சொத்தை வாங்கவில்லை என்றாலும், சொத்து பொதுவாக தான் உள்ளது என்றாலும், நான் கடை கட்டி வாடகை வாங்கி கொண்டு வருகிறேன் என்றால் சரியல்ல.

19) இந்த வழக்கில் எனது அப்பாவிற்கு சொந்தமான அனைத்து சொத்துக்களையும் சேர்க்காததாலும், வழக்கு சொத்துக்களின் ஆவணத்தை தாக்கல் செய்யாததாலும், இந்த வழக்கில் எனக்கு எந்த பரிகாரமும் கிடையாது என்றால் சரியல்ல. தாவா சொத்து என் அப்பாவின் பொது சொத்து என்பதால் என் அப்பா 2ம் பிரதிவாதிக்கு தான செட்டில்மெண்ட் எழுதி வைத்து விட்டார் என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி பேரில் தாவா சொத்திற்கான பட்டா, வீட்டுவரி, மின்சார வரி அவர் பெயரில் உள்ளது என்றால் ஆமாம். அவர்

ஏமாற்றி வாங்கி கொண்டார். 4ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் பற்றி என் அப்பா இறந்த பிறகு 2, 3 மாதங்கள் கழித்து தான் தெரிய வந்தது. தானசெட்டில்மெண்ட் பத்திரம் செல்லாது என்று கேட்டுள்ள பரிகாரம் கால தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதனால் அந்த பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

20) நான் 18.10.2023ல் என் தம்பியிடம் பாகம் கேட்டதாக சொல்வது தவறு என்றால் நான் என் தம்பியிடம் சென்று பாகம் கேட்கவில்லை. என் தம்பிக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை என்பதால் கேட்கவில்லை. என் தம்பியிடம் நான் பாகம் கேட்டதாக சொல்லியிருப்பது தவறு என்றால் சரிதான். பி.கே.பவுன்ராஜ் எனக்கு அத்தை மகன். பவுன்ராஜ் எனக்கு மருத்துவ செலவு செய்தார். நான் அவரிடம் பணம் எதுவும் வாங்கவில்லை. எனக்கு ரத்தம் ஏற்ற இறங்க பவுன்ராஜ் தான் செலவு செய்தார். என் அம்மாவிடமிருந்து பவுன்ராஜ் கடன் வாங்கி விட்டு அந்த பணத்தை செலுத்ததால் என் அம்மா வழக்கு போட்டு இருப்பதால் பவுன்ராஜ் சொல்லி தான் இந்த வழக்கை நான் போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நானும் பவுன்ராசும் வஞ்சுக கூட்டு சேர்ந்து என் அம்மா மீதும், என் தம்பி மீதும் எந்த வழக்கை போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் அடிப்படை முகாந்திரம் இல்லாமல் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/Tmt.U.Monica,M.L.,
Additional District Judge,
Dharmapuri.